V Nahesan

# இந்திய — இலங்கை ஒப்பந்தமும் புரட்சிக் கம்யூனிஸ்ட் கழகத்தின் பணிகளும்



MR. SIVA. JOTHILINGAM
B.A (Hons) Po-Sc., Dip-IN-IA (BCIS),
Teacher,
Goodshepherd Convent,
COLOMBO-13.

நான்காம் அகிலத்தின் அனைத்துலகக் குழுவின் அறிக்கைகள்

[நவம்பர் – 19 – 1987]

[ஒக்டோபர் — 10 — 1986]

MR. SIVA. JOTHILINGAM
B A (Hons) Po-Sc., Dip-IN-IA (BCIS),
Teacher,
Goodshepherd Convent,
COLOMBO-13.

# இந்திய — இலங்கை ஒப்பந்தமும் புரட்சிக் கம்யூனிஸ்ட் கழகத்தின் பணிகளும்

## நான்காம் அகிலத்தின் அனைத்துலகக் குழுவின் அறிக்கை

## நவம்பர் — 19 — 1987

பின் தங்கிய நாடுகளில் தேசிய முதலாளி வர்க்கத்தின் நம்பிக்கை மோசடி, பிற்போக்கு பண்பு ஏற்கனவே இந்நூற்றுண்டின் எண்ணற்ற துன்பியல் அனுபவங்களின் மூலம் போதிய அளவில் வெளிப்பாடாகாது இருந்திருக்குமானால் இந்திய — இலங்கை உடன்படிக்கையின் கைச்சாத்தும், வடக்கு, கிழக்கு மாகாணங்களில் இந்திய ஆக்கிரமிப்பும் ஒடுக்கப்படும் பாட்டாளிகளுக்கு இன்னுமோர் கசப்பான அனுபவத்தை தந்துள்ளது.

காந்தி — ஜயவர்தன நடவ க்கைகளில் ஏதும் விந்தை இருப்பின், அது குறைகாணும் போக்கு, மூர்க்கத்தனத்தின் அளவீடுகளுடன் தமது கூட்டுச் சதியினை நிறைவேற்றியதே. தேசிய முதலாளி வர்க்கப் போக்கிலிகளின் சுடுகாட்டில் இவ்கொலைகாரர்களும் சியாங்கைசேக், சாதத், மொபூடு போன்ற சஞ்சீவி ஏகாதிபத்தியக் கூலிகளுக்கு அருகே தமக்கோர் இடத்தினை வென்று கொண்டுள்ளனர். தமது இரண்டு நாடுகளின் எதிர்

காலத்தில் இந்திய — இலங்கை தேசிய முதலாளி வர்க்கம் ஏதும் முற்போக்குப் பாத்திரத்தினை வகிக்க இடமுண்டு என்ற நப்பாசைகள் ஜயவாதன — காந்தி கொள்கைகள் அடியோடு சிதறடித்துள்ளன.

(2) பல தசாப்தங்களாக இந்திய முதலாளி வர்க்கம் காந்தியம் எனப்பட்ட வரலாற்று விளக்கங்களை விளக்கத்தின் பகிமையில் குளிர் காய்ந்து வந்துள்ளது. காங்கிரஸ் கட்சி சுருக்களின் ஊசலாடும் ஊழல்களுக்கு ஒரு திரையாக மகாத்மாவின் அரசியல் தந்திரம் மிக்க சுயகலமின்மையால் தடுமாறி சுதவின்றி எழும்படும் வெகுஜனங்களை இன்னமும் சரண்டிக் கொண்டுள்ளது. தம் உலகுக்கு 'கூட்டுச் சேராமையின்' தயவில் புனிதராகக் காட்டி வரும் அதே வேளையில் இந்திய முதலாளி வர்க்கம், உலகின் நான்காவது பெரும் இராணுவ பலத்தினால் அமைதியாகவும் ஏதேச்சாதிகாரமான முறையிலும் தென் ஆசியாவில் ஏகாதிபத்திய நலன்களை பேணிக்காத்ததோடு தனது சொந்த நாட்டிற்கு உள்ளேயே எண்ணற்ற ஒடுக்கப்படும் தேசிய இனங்களின் ஜனநாயக அபிலாசைகளை துவம்சம் செய்து உள்ளது. தேசிய விடுதலைக்கான போராட்டத்தில் கலந்து கொண்டமைக்கான சிறிதளவேனும் வரலாற்றுப் பெருமை கூட இல்லாத இலங்கை முதலாளி வர்க்கம் தனது மேலாதிக்கத்தை நியாயப்படுத்த புவியியல் சமயங்களையும் விஜயன், துட்டுகைமுனு, பராக்கிரமபாகுகளின் விநோதமான கட்டுக்கதைகளையும் தேடியது.

(3) 1948 ல் தோட்டத் தொழிலாளர்களின் குடியுரிமை பறிப்பும், 1956 ல் தமிழ் மொழிக்கு சம அந்தஸ்து மறுக்கப்பட்டதில் இருந்து 1983 ம் ஆண்டின் தமிழர் விரோத கலவரங்களும் அதன் பின்னைய வடக்கு — கிழக்கு மாகாண ஆக்கிரமிப்பும் இலங்கை முதலாளி வர்க்கம் — ஒரு முறிவுண்ட அறிக்கை போல் தனது இரத்தம் தோய்ந்த மரபுகளை இடைவிடாது பேணி வந்தது. ஐக்கிய அரசின் இறைமையை காப்பதாகக் கூறிக் கொண்டே இவற்றைச் செய்து வந்தது. தமிழருக்கு எதிரான தனது யுத்தத்துக்கு மக்கள் ஆதரவை திரட்டும் பொரு

ட்டு மிகவும் புராதனமான வெளிநாட்டு காழ்ப்புணர்வு பாணியில் இந்திய 'விஸ்தரிப்புவாதத்திற்கு' எதிராக சிங்கள இனம் ஒரு இறுதி முயற்சி எடுப்பதாக கூறிக் கொண்டது. எவ்வளவுக்கு எவ்வளவு இது கிராமிய ஜனங்களின் வாழ்க்கையின் அடிப்படை தேவைகளை நிராகரித்ததோ அவ்வளவுக்கு அவ்வளவு அதிகமாக (இரண்டு முக்கிய முதலாளித்துவக் கட்சிகளும்) யூ. என். பியும் சிறீலங்கா சுதந்திரக் கட்சியும் விவசாயிகளை தமிழர் விரோத இனவாத நஞ்சினுள் மூழ்கடிக்க முயன்றனர்.

(4) இதே சமயம், அயோக்கியமான புதுடில்லி சூழ்ச்சிக்காரர்கள் இலங்கைத் தமிழர்களின் நிலைபற்றி நன்கு பிரசித்தமான முறையில் முதலைக் கண்ணீர் வடித்ததோடு சிங்கள இனப் படுகொலைகளில் இருந்து அவர்களைக் காக்கும் பக்திமான் ஆகவும் காட்டிக் கொண்டனர். இதற்குப் பிரதியீடாக தேசிய இயக்கக் கொள்கைகள் மீது முழு அளவிலான இரத்து (பீட்டோ) அதிகாரத்தை வேண்டி நின்றது.

(5) இறுதியில், இந்த மோசடி நடிப்புக்களை வழி நடத்திய கொலைகார வர்க்க நலன்கள் குருட்டுத்தனமான தெளிவுடன் அம்மலமாக்கப்பட்டன. ஜயவர்தனவின் சிங்கள தேசிய இறைமையினை பேணவும், காந்தியின் தமிழர் சுதந்திரக் காப்பும் தாம் எம் மக்கள் சார்பில் பேசிக் கொண்டனரே அதே மக்களுக்கு எதிரான ஒன்றுபட்ட இராணுவப் பிரச்சாரத்தில் ஈடுபடும் அசிங்கமான காட்சியினுள் நாற்றம் எடுத்தன. ஜயவர்தன வடக்கு — கிழக்கு மாகாணங்களை காலவரையறையற்ற எதிர்காலத்துக்கு இந்திய இராணுவத்திடம் கையளித்துள்ளார். வடக்கில் உள்ள தமிழர்களை ஒழித்துக் கட்டுவதில் நான்கு ஆண்டுகள் ஈடுபட்டிருந்த இலங்கை இராணுவம், வறிய சிங்கள தொழிலாளர், விவசாயிகளை ஒடுக்க தெற்கே அனுப்பப்பட்டு உள்ளது. இந்தியர்களைப் பொறுத்த மட்டில் அவர்களின் தமிழ் மக்களை காக்கும் நடவடிக்கை, அவர்களை நிர்மூலமாக்கும் முழு அளவிலான ஒரு தாக்குதலை நடத்துவதினுள் கரைக்கப்பட்டுள்ளது. இந்தியர்களின் நடவடிக்கைகள்,

ஹியூலை தரைமட்டம் ஆக்குவதை நியாயப்படுத்திய வியட்னாமில் இருந்த அமெரிக்க படைத் தளபதியின் வார்த்தைகளை நினைவுக்கு கொணர்கிறது:

''ஒரு நகரத்தைக் காப்பாற்றுவதற்கு, சில வேளைகளில் அதனை நிர்மூலமாக்குவது அவசியம்.'' இங்கு இந்தியர்கள் ஒரு தேசிய இனத்தைக் 'காப்பாற்ற' அதன் மக்களை நிர்மூலமாக்கும் படி பிரேரிக்கின்றனர்.

(6) இலங்கை முதலாளி வர்க்கத்தின் நடவடிக்கைகளுக்கு பல வரலாற்று முன் உதாரணங்கள் உள. இச்சமயத்தில் 1871 ல் பாரிஸ் தொழிலாள வர்க்க கிளர்ச்சியாளர்களுக்கு எதிராக பிரான்சிய இராணுவம் பிரெஸ்சியன் இராணுவத்துடன் கூட்டுச் சேர்ந்தமையையும் 46 வருடங்களின் பின்னர் கெரென்ஸ்கி போல்ஷிவிக் புரட்சியை தடை செய்யும் பொருட்டு பீட்ரோகிராட்டை ஜேர்மனியர்களிடம் சரணாகதி அடையச் செய்ய திட்டமிட்டதையும் ஒப்புவமையாக நினைவு கூர்வது பொருத்தமானது. தேசிய முதலாளி வர்க்கத்தின் 'தேசாபிமானம்' சகல வரலாற்று சாரம்களும் அற்றது என்பதை ஜயவர்தனாவின் துரோகத்தின் படிப்பினை காட்டுகின்றது. இது முதலாளித்துவப் பேராசைக்கான பலவீனமான ஒரு வெறும் சாக்குப் போக்கே. அத்தோடு இது எப்போதும் இனி தனது அத்தியவசியமான வர்க்க நலன்களுக்கு கீழ்ப்படியச் செய்து கொண்டுள்ளது. இலங்கையில் முதலாளித்துவ ஆட்சி இன்று வடக்கில் இந்திய ஆக்கிரமிப்பு தெற்கில் தமிழர் விரோத இனவாதம் என்ற இரட்டை தூண்களில் தங்கியுள்ளது. இந்நிலைமை, எந்தவொரு நாட்டின் உள்ளும் சகல தேசிய, இன, மத குழுக்களின் ஜனநாயக சமத்துவம் பாட்டாளி வர்க்க தலைமையிலான சோசலிசப் புரட்சியின் ஊடாக மட்டுமே அடையப்பட முடியும் என்ற வரலாற்று உண்மையைச் சுட்டிக் காட்டுகின்றது.

(7) காந்தி — ஜயவர்தனாவின் சதிகள் தேசிய முதலாளி வர்க்கத்தின் முரட்டுத் தன்மையை இந்தியத் துணைக் கண்டத்தில் அம்பலப்படுத்தி உள்ள அதே வே

ளையில் இந்த சமீபத்திய வரலாற்று அனுபவங்கள் தேசிய சுயநிர்ணயத்தை அடைய இலாயக்கற்ற குட்டி முதலாளித்துவ தேசியவாதத்தின் வங்குரோத்தையும் நிரூபித்துக்காட்டியுள்ளது. அனைத்து மக்களதும் தலைவிதி தராசுத் தட்டில் தொங்கும் வரலாற்று நெருக்கடிக் காலங்களில் உணர்ச்சித் தூண்டல்களுக்கு இடமேயில்லை.

தமிழ் ஈழ விடுதலைப் புலிகளின் நிலைக்கான அனுதாபமும் அதன் போராளிகளின் தலைவிதியைப் பற்றிய அக்கறையும் சொல்லியே ஆக வேண்டியதை சொல்லத் தவறுவதற்கான மன்னிப்பு ஆகிவிடாது: 1987 ஜூலை 29 ல் இருந்து தேசிய விடுதலைப் போராட்டம் கண்ட மோசமான பின்னடிப்புக்களுக்கு விடுதலைப் புலிகளின் கொள்கைகளே முக்கிய பொறுப்பாகும்.

(8) இந்திய சூழ்ச்சியினதும் மோசடியினதும் விளைவாகவே தாம் புதுடில்லிக்கு விமானத்தில் செல்லவும், இலங்கை — இந்திய உடன்படிக்கையின் வாசகங்களுக்கு இணங்கவும் தீர்மானம் செய்ததாக பிரபாகரன் இன்று கூறுகின்றார். இந்தச் "சட்டு" தமிழ் ஈழ விடுதலைப் புலிகள் இயக்கத்தின் கள்ளங்கபடம் அற்ற தன்மையை மட்டும் அன்றி, குட்டி முதலாளித்துவ தேசியவாதத்தின் அரசியல் மலட்டுத் தனத்தையும் அம்பலப்படுத்துகின்றது. விடுதலைப் புலிகளின் தலைவர் காந்தியினால் ஏமாற்றப்பட்டிருப்பின் இதற்குக் காரணம், தமிழ் ஈழத்தின் சுயநிர்ணயத்தினை அடைவதல் அதன் முழுக் கொள்கையும் இநதிய முதலாளி வர்க்கத்தின் உதவியை வேண்டுவதின அடிப்படையிலேயே கட்டி எழுப்பப்பட்டிருந்தது. இந்தப் பேராபத்து மிக்க தவறான கணிப்புக்கான மூலம் முதலாளித்துவ தேசியவாதத்தின் தவிர்க்க முடியாத வர்க்க முன் நோக்கும், வேலைத்திட்டமுமே ஆகும். 70 வருடங்களுக்கு முன்னர் லெனின், ஒரு ஒடுக்கப்படும் தேசிய இனத்தின் முதலாளி வர்க்கம் தனது சொந்த தேசிய சிறப்புரிமையை அடையவும் 'சுதந்திர' நாட்டினுள் தொழிலாளர் விவசாயிகளைச் சுரண்டுவதற்கான சிறந்த நிலைமைகளை நிலைநாட்டும் நிலைப்பாட்டின் அடிப்படையிலேயே சுயநிர்ணயத்தினை

ஆல் கொல்கின்றது என எச்சரிக்கை செய்தார். இந்தச் சுயநலம்; கூலி உழைப்பில் இருந்து உபரிப் பெறுமானத்தை பிடுங்கிக் கொள்கின்ற — அதாவது தொழிலாள வர்க்கத்தினை அடிமைப்படுத்துகின்ற — ஒரு வர்க்கம் என்ற முறையில் முதலாளி வர்க்கத்தின் தன்மையில் புற நிலையாக வேரூன்றி உள்ளது. இந்த வர்க்கப் புற நிலையானது முதலாளித்துவ தேசியவாதிகளின் சகல கன்னைகளதும் — தமிழ் ஈழ விடுதலைப் புலிகள் போன்ற பெரிதும் தீவிரமான போக்குக்கள் உட்பட — கொள்கைகளை வழி நடத்துவதோடு அவற்றின் அரசியல் உடல் அமைப்பையும் நிர்ணயம் செய்கின்றது.

ஒவ்வொரு படியிலும் முதலாளித்துவ தேசியவாதிகள் விடுதலைப் போராட்டம் ''கை கடந்து போய்'' முதலாளித்துவ ஆட்சியின் பராமரிப்புக்கு ஒரு அச்சுறுத்தலாக இடமளிக்கா வண்ணம் பார்ப்பதில் அக்கறையாக உள்ளனர்.

(9) இதனால் ஒடுக்கப்படும் வெகுஜனங்களை அணி திரட்டுவதில் எல்லை வரையறைகள் விதிக்க நெருக்கப்பட்டனர் ஒடுக்கப்படும், பின்தங்கிய நாடுகளைச் சேர்ந்த முதலாளி வர்க்கம், ஏகாதிபத்திய ஒடுக்கு முறையின் விலங்குகளில் இருந்து தமது நாடுகளை விடுதலை செய்வதற்கு அவசியமான தவிர்க்க முடியாத முன் நிபந்தனையான சர்வவியாபகத்தை அடைவதில் அங்க ஜீவியாக இலாயக்கற்று உள்ளது. புரட்சிக் கம்யூனிஸ்ட் கழகம், அக்டோபர் 23 ம் திகதிய 'தொழிலாளர் பாதை' யில் சரியாகக் குறிப்பிட்டது போல்:

''எனினும் தேசிய சிறப்புரிமைவாதத்தின் அடிப்படையில் தமது உரிமைகளை மட்டும் அடையும் ஒரு இயக்கத்தை கட்டி எழுப்புவதன் மூலம் தேசிய விடுதலையை அடைய முடியாது. நாம் வாழ்ந்து கொண்டுள்ள இன்றைய சகாப்தத்தில் அத்தகைய ஒரு இயக்கம் எவ்வளவுதான் பொதுஜன ஆதரவைத் திரட்டிக் கொள்ளினும் அது எதிரி முதலாளி வர்க்க அரசுகளின் பலத்தின் முன் ஈடாட்டம் காண்கின்றது. குறிக்கப்பட்ட ஒரு ஒடு

க்கப்படும் தேசிய இனத்தின் விடுதலை இயக்கமானது. ஜனநாயகத்துக்காக முழுமையாகவும், மனம் விட்டும் போராடும் ஒரு இயக்கத்தின் அன்யோன்ய அங்கமாக மட்டுமே முன் செல்ல முடியும்.

"தேசிய சிறப்புரிமைவாதம் ஒடுக்கப்படும் தேசிய இனத்தின் விடுதலைப் போராட்டம் அத்தகைய ஒரு இயக்கத்தின் பாகமாகுவதைத் தடை செய்கின்றது. இதற்குக் காரணம் தேசிய சிறப்புரிமைவாதம், இறுதி ஆய்வுகளின் படி, தேசிய முதலாளிகள் தமது சொந்த நாட்டின் தொழிலாளர்களைச் சுரண்டவும், விவசாயிகளைக் கசக்கிப் பிழியவும் செய்யும் முயற்சிகளுடன் இணைந்து கொண்டுள்ளதே. தமிழ் ஈழ விடுதலைப் புலிகளின் அரசியல் பலவீனம் இதில் இருந்தே ஊற்றெடுக்கின்றது.

(10) இந்திய இராணுவத்தின் பயங்கரமான மக்கள் படுகொலைகளின் அமுலை உள்ளடக்கிய இந்திய — இலங்கை ஒப்பந்தத்தை அவர்கள் ஏற்றுக் கொண்டதன் சோகமயமான விளைபயன்களுக்கு இடையேயும் தமிழ் ஈழ விடுதலைப் புலிகள், இன்னமும் காந்தி ஆட்சியுடனான கூட்டின் இடிபாடுகளுக்கு இடையேயும் தொங்கப் பார்க்கின்றனர். அக்டோபர் 14 ம் திகதி அளவில் கூட, பிரபாகரன், இந்திய இராணுவத்தின் மக்கள் படுகொலை நடவடிக்கைகள் தப்பபிப் பிராயத்தின் அடிப்படையில் இடம் பெறுவதாகக் காட்ட முயன்று வந்தார். காந்திக்கு அனுப்பிய ஒரு செய்தியில் அவர் கூறியதாவது;

"இந்தியா போன்ற ஒரு ஜனநாயக நாட்டிற்கு தமது தலைவிதியை தாமே தெரிவு செய்து கொள்ளும் ஜனநாயக சுதந்திரத்தைக் கொண்ட மக்கள் மீது தனது கருத்தை துப்பாக்கி முனையில் திணிப்பது பண்பாகமாட்டாது."

இந்திய 'ஜனநாயகம்' பற்றிய பிரபாகரனின் கண்டுபிடிப்பு அப்பாவித் தனத்துக்கு ஒரு நல்ல உதாரணம். கொழும்பிலும், யாழ்ப்பாணத்திலும் உள்ள தமது வர்க்க எதிரிகளுக்கு எதிராக தொழிலாளர்கள், விவசாயி

களை சுயாதீனமாக அணி திரட்டுவதைத் தடை செய்வதை நோக்கமாகக் கொண்ட தமிழ் வெகுஜனங்களை ஏமாற்றும் கே லமான நடவடிக்கை.

(11) தமிழ் ஈழ விடுதலைப் புலிகளின் தமது, தேசிய சுயநிர்ணயத்துக்கான கோரிக்கையினை மதிப்பிழக்கச் செய்யவும் இல்லை அல்லது அத்தகைய ஒரு போராட்டத்தை உதவாக்கறையானதாக்கி விடவும் இல்லை. மாறாக அது தேசிய ஜனநாயக இயக்கத்தின் தலைவிதி ஒடுக்கப்படும் நாட்டின் தொழிலாளர் வர்க்கத்தின் வரலாற்றுப் பாத்திரத்துடன் பிணையுண்டு போயுள்ளதையும் மீண்டும் காட்டுகின்றது

ஜனநாயக இயக்கத்தின் தீர்வு காணப்படாத ஏனைய சகல பணிகளைப் போன்றே, தேசிய சுயநிர்ணயமும் பாட்டாளி வர்க்க சர்வாதிகாரத்தின் மூலம் மட்டுமே அடைய முடியும். உண்மையில் நான்காம் அகிலத்தின் இந்த வரலாற்று முன்நோக்கு; கடந்த 40 ஆண்டுகளுக்கு மேலாக இலங்கை சிங்கள — தமிழ் வெகுஜனங்களின் அனுபவங்களின் மூலம் துன்பகரமான முறையில் நிருபிக்கப்பட்டுள்ளது. கடந்த கால் நூற்றூண்டாக பப்லோவாத திரிபுவாதிகளின் அங்கீகாரத்துடன் சமசமாஜ கட்சியினர் இழைத்த சொல்லிடங்காத காட்டிக் கொடுப்புக்கள் இல்லையேல் தமிழர்களின் தேசிய விடுதலைப் போராட்டத்துக்கும் இலங்கைப் பாட்டாளி வர்க்கத்தின் வர்க்சப் போராட்டத்துக்கும் இடையே ஒரு போதும் முறிவு ஏற்பட்டிராது. உண்மையில் 1964 ல் சமசமாஜக் கட்சி பண்டாரநாயக்காவின் கூட்டரசாங்கத்தினுள் நுழைந்தமை, வர்க்கப் போராட்டம், தேசிய விடுதலைப் போராட்டம் இரண்டினதும் அபிவிருத்தியில் ஒரு வரலாற்று தீர் மேடாக விளங்கிற்று. இந்த வரலாற்றுக் காட்டிக் கொடுப்புக்கு முன்னர் தமிழ் வெகுஜனங்கள் தொழிலாள வர்க்கத்திடமிருந்து தலைமையை எதிர்ப்பார்த்ததோடு, பாட்டாளி வர்க்கம் இலங்கை முதலாளி வர்க்கத்தை தூக்கி வீசியதும் தேசிய ஒடுக்குமுறை நீக்கப்பட்டு விடும் என நம்பியிருந்தது. இது 1953 ம் ஆண்டின் ஹர்த்தால் மூலமும் 1963 — 64 ம் ஆண்டின்

12 கோரிக்கைகள் இயக்கத்தின் மூலமும் சட்ட ரீதியில் பிரத்தியட்சம் ஆக்கியது.

சமசமாஜக் கட்சி சிங்கள முதலாளி வர்க்க அரசினைப் பேணிய வண்ணம் தேசிய ஒடுக்குமுறையை ஸ்தாபன ரீதியாக்கிய ஒரு அரசியலமைப்புச் சட்டத்தின் அமுலில் நிசமாகப் பங்கு கொண்டதன் மூலம் 1964 — 1972 க்கும் இடைப்பட்ட காலத்தில் முழு நிலைமையும் மாற்றம் அடைந்தது. சமசமாஜக் கட்சியினால் கைவிடப்பட்ட தமிழ் வெகுஜனங்கள் புதிய பாதையை தேடியதோடு, முதலாளித்துவ தேசியவாத அரசியலினுள்ளும் ஈர்க்கப்பட்டனர்.

(12) சமசமாஜக் கட்சியின் காட்டிக் கொடுப்பு என்னவாக இருந்த போதிலும், முதலாளித்துவ தேசியவாதத்தின் கட்டு முடித்தனத்தில் இருந்து வெளியேறுவதற்கான ஒரே முன்நோக்கினை — தமிழரதும் இலங்கைத் தொழிலாள வர்க்கத்தினதும் இணைந்த போராட்டத்தினை அடிப்படையாகக் கொண்ட ஒரே முன்னோக்கே வழங்குகின்றது. இந்திய ஆக்கிரமிப்பு தமிழ் தேசிய இனத்தினதும் அத்தோடு தெற்கில் உள்ள சிங்கள வெகுஜனங்களினதும் ஒடுக்கு முறையின் வர்க்க அடிப்படையை அம்பலப்படுத்தியுள்ளது. இது சிங்கள — தமிழ் பேசும் தொழிலாள வர்க்கத்தின் மேலாதிக்கத்தின் கீழ் தேசிய விடுதலைப் போராட்டத்தை வர்க்கப் போராட்டத்துடன் இணைக்க வேண்டியதன் அவசியத்தை தோற்றுவித்துள்ளது திட்டவட்டமாகச் சொன்னால் தமிழ் ஈழத்தையும் சிறீலங்காவையும் கொண்ட ஐக்கிய சோசலிச அரசுகளின் பதாகையை உயர்த்த வேண்டியுள்ளது

(13) நாற்றமெடுத்துப்போன முதலாளித்துவ அரசுகளின் கட்டுமானத்தின் மீதும் அவற்றின் செயற்கையான எல்லைகளின் கழுத்தறுப்பு வரையறைகளுக்குள்ளும் வெகுஜனங்களின் ஜனநாயக அபிலாசைகளையோ அல்லது அடிப்படையான சடத் தேவைகளையோ திருப்தி செய்ய முடியாது. இரண்டாம் உலக யுத்தத்தின் முடிவில் இருந்து ஏகாதிபத்தியம் எந்தவொரு தனி தேசிய அரசை

யும் பல்வேறு மொழி, மத, இனவாரி சேர்க்கைகளின் நிச ஜனநாயக சமத்துவத்தின் அடிப்படையில் சிருஷ்டிக்க இடமளிக்கவில்லை. தவிர்க்க முடியாத விதத்தில் ஏகாதிபத்திய அங்கீகாரத்துடனான 'சுதந்திரம்' என்பது வம்பில் பிறந்த அரசுகளை நிர்மாணிப்பதையே கருதியது. இவை ஜனநாயக அடிப்படைக் கொள்கைகளிர் ஆபத்தான சமரசங்களுக்கு செல்வதன் அடிப்படையில் இவை நிறுவப்பட்டன. இந்தத் தொடரில், தேசிய முதலாளி வர்க்கம் ஒடுக்கப்படும் வெகுஜனங்களின் விடுதலையாளனாக அன்றி, ஏகாதிபத்திய கொள்ளையின் கனிஷ்ட பங்காளனாகத் தொழிற்பட்டது. இந்த முறையில் சிருஷ்டிக்கப்பட்ட அரசானது, ஒழுக்கக் கேடான முதலாளித்துவத்தின் ஒரு சிறைக் கூடத்துக்கு அப்பால் செல்லாததோடு அங்கு உற்பத்தி சக்திகளின் முற்போக்கு அபிவிருத்தி முடியாது போயிற்று.

(14) இந்த முதலாளித்துவ அரசுகள் மேலான ஏகாதிபத்தியவாதிகளின் மேலாதிக்க விளைவுகள் நன்கு பிரசித்தமானது. உறுதியான உள்ளூர் கைத் தொழில்களை அபிவிருத்தி செய்ய முடியாத அவற்றின் பொருளாதார தலைவிதியானது ஒரு சில மூலப் பொருட்களை ஏற்றுமதி செய்வதுடன் பிணைக்கப்பட்டுள்ளது. பிரமாண்டமான திருப்பிச் செலுத்த முடியாத கடன் பளுவினுலும், பரந்த அளவிலான படிப்பறிவின்மை, நோய்கள், பட்டினியால் பின்தங்கிய நாடுகள் திக்குமுக்காகுகின்றன. உள்ளூர் கைத் தொ ல்கள் நிறுவப்பட்டுள்ள அருகாமையான இடங்களில் கூட இவை முற்றிலும் ஏகாதிபத்திய கட்டுப்பாட்டுக்குட்பட்ட பல்தேச உற்பத்தியின் ஏகாதிபத்திய அதி இலாப மூலங்களாகவே முற்றிலும் பயன்படுத்தப்படுகின்றன. அத்தகைய போலி பொருளாதார அபிவிருத்தியானது ஒடுக்கப்படும் சனத்தொகையின் தேசிய நலன்களுக்கு எதுவித பங்களிப்பையும் செய்வதில்லை. முதலாளி வர்க்கத்தின் மகிழ்ச்சிகரமான அங்கீகாரத்துடன் உருவாகும் அத்தகைய நிலைமைகளால் இனவாத யுத்தங்களின் பயங்கரம் நிலவுகின்றது. இந்நிலைமையை முதலாளி வர்க்கம் தொடர்ந்து ஆட்சி செய்யும் வரை மாற்றி அமைத்துவிட முடியாது.

சுதந்திரத்துக்குப் பின்னைய இந்தியா, பாகிஸ்தான், இலங்கை, பங்களாதேஷ், பர்மா முதலான நாடுகளின் வரலாற்று, உண்மையில் உலகின் மாஜி காலனித்துவ நாடுகள் ஒவ்வொன்றினதும் வரலாறு — முதலாளி வர்க்கம் நிச தேசிய இணைப்பினையும், அரசியல் சுதந்திரத்தினையும் நிலைநாட்ட முடியாது என்பதை தீர்க்கமாக நிரூபித்துள்ளது.

(15) வரலாறு, ஸ்டாலினிஸ்டுகள், திரிபுவாதிகள், குட்டி முதலாளித்துவ தேசியவாதிகளின் எதிர்ப்புக்களுக்கு இடையேயும் இப்பணியை பாட்டாளி வர்க்கத்திடம் கையளித்துள்ளது. தேசிய இனங்களின் சுயநிர்ணய உரிமையை யதார்த்தமாக்கக் கூடிய ஒரே சமூக சக்தி இதுவே. எனினும் இது இதனை தேசிய முதலாளி வர்க்கத்தின் ஒரு பின்னிணைப்பாக அன்றி அதன் மூர்க்கமான எதிரி என்ற முறையிலேயே செல்கின்றது. தனது சொந்த ஆயுதங்களுடனும், தனது சொந்த வேலைத்திட்டத்தின் அடிப்படையிலும் கிராமங்களிலும், நாட்டுப்புறங்களிலும் உள்ள சகல ஒடுக்கப்படும் வெகுஜனங்களை தன்பின் அணி திரட்டிக் கொண்டு போராடுகின்றது. சகல ஒடுக்கப்படும் மக்களினதும் நியாயபூர்வமான ஜனநாயக உரிமைகளை தனது சர்வாதிகாரத்தை நிலைநாட்டும் பாட்டாளி வர்க்கத்தின் தலைமையிலான சோசலிசப் புரட்சியின் ஒரு உப — உற்பத்திப் பொருளாகவே சுயநிர்ணயம் ஈட்டப்படுகின்றது. தேசிய இனங்களின் நிசமான சமத்துவத்துக்கான திட்டமாக இது சுய விருப்பின் அடிப்படையில் ஒரு ஐக்கிய சோசலிச ஒன்றியத்தின் சிருஷ்டியை பிரேரிக்கின்றது.

சகல ஒடுக்கப்படும் தேசிய இனங்களையும் சுய விருப்பில் இணைய வைப்பதானது பொருளாதார, கலாச்சார முன்னேற்றத்துக்குச் சிறந்த வாய்ப்பினை அளிக்கும் என்ற நம்பிக்கையில் பாட்டாளி வர்க்க சர்வாதிகாரமானது பிரிந்து செல்ல விரும்பும் தேசிய இனங்கள் அங்ஙனம் செய்யும் உரிமையைக் கொண்டிருக்கவும் உத்தரவாதம்

அளிக்கின்றது புரட்சிக் கம்யூனிஸ்ட் கழகத்தினு முன் வைக்கப்பட்டு உள்ள தமிழ் ஈழம், சிறீலங்காவின் ஐக்கிய சோசலிஸ்ட் அரசுகளின் வேலைத்திட்டத்தின் அத்தியாவசியமா உள்ளடக்கம் இதுவே தான்,

(16) இந்தப் பாராட்டத்துக்காக முக்கிய தடை, இந்திய — இலங்கை ஆளும் வர்க்கங்களுடன் சம மாஜ — ஸ்டாலினிஸ்டுகள் கொண்டுள்ள கைக்கூலி உறவுகளே, ஜயவர்தனு ஆட்சியுடனுன அவர்களின் மறைமுக கூட்டரசாங்கம் ஐக்ய அரசினைக் காக்கும் நடவடிக்கையின் தவிர்க்க முடியாத விளைவேயாகும் இவ்விரு கட்சிகளிலும் எதுவுமே முதலாளித்துவத்தில் இருந்து ஒரு துளி அளவும் சுயாதீனம் அற்றவை. கம்யூனிஸ்ட் கட்சியின் வரலாறுனது உண்மையில் ஸ்டாலினிசத்தின் முழு வரலாற்றினுள்ளும் வேரோடி உள்ளது சமசமாஜக் கட்சியைப் பொறுத்தமட்டில் அது தனது கடந்தகால புரட்சிகர வரலாற்றுத் தொடர்புகள் அனைத்தையும் துண்டித்துக் கொண்டு விட்டது. இப்பலம் எங்ஙனம் வீழ்ந்தது? தேசிய இனப்பிரச்சினை சம்பந்தமான கொல்வின் ஆர். டி. சில்வாவின் கடந்த கால ஆக்கங்கள் மார்க்சிச இலக்கியத்தின் நிச மாபெரும் படைப்புக்களாகும். அவற்றை இன்று வாசிக்கையில் அவர் இன்னமும் தலைமை தாங்கும் கட்சியின் முழு அரசியல் போக்குக்கும் எதிரான குற்றப் பத்திரமாக அவை விளங்குகின்றன சமசமாஜ கரத்தையை யூ. என். பி. குதிரையில் கட்டுவதன் மூலம் டி. சில்லா இத்தீவில் உள்ள படுபிற்போக்கு இனவெறிச் சக்திகளுக்கு அளப்பரிய விதத்தில் கைகொடுத்து உள்ளார். சிங்கள அரசினை காக்கும் அக்கறையற்ற தொழிலாள வர்க்கத்தின் நலன்களுக்கு எதிராக ஜயவர்தனு ஆட்சியின் படுமோசமான குற்றங்களுக்கு சமசமாஜக் கட்சி கூட்டுப் பொறுப்பு ஏற்றுள்ளது.

(17) மேலும் வடக்கு — கிழக்கில் இந்தியர்களின் பிரசன்னத்தை அங்கீகரிப்பதன் மூலம் இது ஒடுக்கப்படும் சிங்கள விவசாயிகளின் நியாயமான தேசிய உணர்வுகளை இரக்கமற்ற முறையில் புறக்கணிப்பதோடு, படுபிற்போக்கு மக்கள் விடுதலை முன்னணியினதும் அதன் நம்பிக்

கை மிக்க சிறீலங்கா சுதந்திரக் கட்சி ஆலோசகர்களது ம் கரங்களைப் பலப்படுத்துகின்றது. இக்கொள்கை, குட்டி முதலாளித்துவ வெகுஜனங்களின் கண்களில் தொழிலாளர் இயக்கத்தை செல்வாக்கு இழக்கச் செய்யவும், சிங்கள இனவெறியின் அடிப்படையிலான பாசிச இயக்கத்தின் பெருக்கத்துக்கும் உதவுகின்றது. இந்திய ஆக்கிரமிப்புக்கு எதிரான போராட்டத்தினை இலங்கை முதலாளி வர்க்கத்துக்கு எதிரான வர்க்கப் போராட்டத்துடனும், அத்தோடு இதே வர்க்கப் போராட்டத்தினை சிங்கள, தமிழ் வெகுஜனங்களை ஜனநாயக ரீதியாக ஐக்கியத்துடன் இணைப்பதற்குப் பதிலாக சமசமாஜக் கட்சி ஒடுக்கப்படும் சனத்தொகையின் சகல பிரிவினரையும் அன்நியமாக்க சாத்தியமான அனைத்தையும் செய்து வருகின்றது. இது இந்திய ஆக்கிரமிப்பினை பெருமை பாராட்டுகின்றது. தமிழர்களை ஒழித்துக் கட்டுவதை ஆதரிக்கின்றது. தெற்கில் ஜயவர்தனவின் ஒடுக்குமுறை நடவடிக்கைகளை அங்கீகரிக்கின்றது. சமசமாஜக் கட்சியின் கொள்கைகளின் அச்சாணி ஒரு சோசலிச, ஜனநாயக வேலைத்திட்டத்தின் அடிப்படையில் தொழிலாள வர்க்கத்தினை சுயாதீனமாக அணி திரட்டுவதை நிராகரிப்பதே.

(18) சம்பவங்களின் முழுப் போக்கும் புரட்சிக் கம்யூனிஸ்ட் கழகத்தின் வேலைத்திட்டத்தினை ரூசுப்படுத்தியுள்ளது. இது மட்டுமே வடக்கில் உள்ள தமிழ் தொழிலாளர்களுக்கும் தெற்கில் உள்ள சிங்களத் தொழிலாளர்களுக்கும் இடையே பாட்டாளி வர்க்க அனைத்துலகவாத மூலோபாயத்தினை பேணுகின்றது.

மேலும் கடந்த வருடம் இந்திய சோசலிசத் தொழிலாளர் கழகத்துடனான நெருங்கிய தோழமை உறவின் மூலம் பு. க. க. பல்கோடி இந்திய தொழிலாள வர்க்கத்தினுள்ளே ட்ரொட்ஸ்கிச கொள்கைகளுக்கான போராட்டத்தினை விரிவுபடுத்தி உள்ளது. இதுவும் கூட இந்திய, இலங்கைத் தொழிலாள வர்க்கங்களின் தலைவிதியானது பிரிக்க முடியாதவாறு இணைந்துள்ளதோடு ஏகாதிபத்தியத்துக்கு எதிரான அவர்களின் போராட்டம் ஒரு

கூட்டுப் போராட்டம் என்ற உண்மையை அங்கீகரிப்ப தை அடிப்படையாகக் கொண்ட ஒரு நஜவான தீர் மானமாகும்.

(19) இன்றைய தீர்க்கமான கட்டத்தில் புரட்சிக் கம்யூனிஸ்ட் கழகத்தினை எதிர் நோக்கும் அவசரமான பணி கூடிய கெதியில் தன் சக்திகளை விரிவுப்படுத்துவ தே. இதற்கு சமசமாஜ, கம்யூனிச கட்சிகளுள் யூ. என் பி. அரசாங்கத்துடன் கொண்டுள்ள கூட்டுகளுக்கு எதி ரான போராட்டத்தினை தீவிரமாக்க வேண்டியுள்ளது. பு க. க. சரியாகக் குறிப்பிட்டவாறு:

''ஒரே முன்வழிப் பாதை; வடக்கு — கிழக்கில் இரு ந்து இந்திய — இலங்கை ஆக்கிரமிப்புப் படைகளை உட னடியாக வாபஸ் பெறக் கோரவும், தமிழ் தேசிய இனத்தின் தேசிய ஜனநாயக உரிமைகளை ஊர்ஜிதம் செய்யப் போராடவும் தொழிலாள வர்க்கத்தினை முத லாளி வர்க்கக் கட்சிகளில் இருந்து சுயாதீனமாக அணி திரட்டப் போராடுவதும், சிங்களம், தமிழ் பேசும் மக் களின் ஒரு சோசலிசக் குடியரசினை நிறுவும் முன்நோக் கின் அடிப்படையில் யூ. என். பி. அரசாங்கத்தை வெ ளியேற்றுவதுமே.''

(20) தெற்கில் யூ. என். பி. அரசாங்கத்துக்கும் முத லாளி வர்க்கத்துக்கும் எதிரான தொழிலாள வர்க்கத் தின் சகல வடிவிலான போராட்டங்களின் தலைமையில் தன்னை அமர்த்திக் கொள்ள பு. க. க. போராடியாக வேண்டும். இப்போராட்டத்தில் தீர்க்கமான அம்சம் இதுவே. உலகப் பொருளாதார நிலைமையின் சீர்கேடு எதிர்வரும் மாதங்களில் உலகம் பூராவும் உள்ள திரி புவாதிகளால் மறக்கப்பட்டு விட்ட ஒரு சக்தியான இலங்கைத் தொழிலாள வர்க்கத்தினை ஒரு புதிய எதி ர்த் தாக்குதலில் இறங்கத் தூண்டும். சரியான புரட் சிக் கொள்கையால் ஆயுதபாணி ஆக்கப்பட்ட இந்த எதிர்வரும் தாக்குதல் இலங்கையினதும் இந்தியத் துணை க்கண்டத்தினதும் முழு அரசியல் சமன்பாட்டினையும் மாற்றி அமைக்கும். சமசமாஜ — கம்யூனிச கட்சிகளின்

காட்டிக் கொடுப்புக்களையும் கிராமிய வெகுஜனங்களின் அவலங்களையும் அடிப்படையாகக் கொண்டு மக்கள் விடுதலை முன்னணி நாட்டுப் புறங்களில் நடாத்திய ஊடுருவல்கள், சிங்கள விவசாயிகளுக்கு ஒரு புதிய முன்நோக்கினை தொழிலாள வர்க்கத்தின் எழுச்சி வழங்கியவுடன் குழி பறித்து போகும்.

(21) கடந்த சில மாதங்களுள் புரட்சிக் கம்யூனிஸ்ட் கழகம் சிரமத்துடன் ஈட்டிய கவர்ச்சியான வெற்றிகளை அனைத்துலகக் குழு பெரும் திருப்தியுடன் அவதானித்துக் கொண்டுள்ளது. அரசாங்க ஒடுக்கு முறைக்கும் சிங்கள இனவாத குண்டர் கும்பல்களின் அட்டூழியங்களுக்கும் முன்நிலையில் அது மட்டுமே தொழிலாள வர்க்கத்தின் பேரில் இந்திய — இலங்கை உடன்படிக்கைக்கு எதிராக பகிரங்கமாக பிரச்சாரம் செய்தது. இந்தச் சகல கஷ்டங்களுக்கு இடையிலும் இந்திய — இலங்கை உடன்படிக்கைக்கு எதிரான இதன் சமீபத்திய கொழும்பு, கண்டி, யாழ்ப்பாண வெற்றிகரமான பொதுக் கூட்டங்கள், பு. க. க சிங்கள, தமிழ் வெகுஜனங்களிடையே பெரும் வெற்றிகளை ஈட்டிக் கொள்ளும் நிலையில் இருந்து வருகின்றது என்பதை — தெற்கில் சமசமாஜ — கம்யூனிச கட்சிகளிடமிருந்தும், வடக்கில் தமிழ் ஈழ விடுதலைப் புலிகள் இயக்கத்திடம் இருந்தும் சக்திகளைக் கைப்பற்றும் நிலையில் உள்ளதை — சுட்டிக் காட்டுகின்றது.

நவம்பர் 12 ல் கொழும்பு நகரில் பு. க. க. வின் நான்கு முன்னணி காரியாளர்களை — தேசிய செயலாளரின் சகோதரர் உட்பட — கொலை செய்ய இடம் பெற்ற யூ. என். பி. யின் முயற்சிக்கு பின்னணியில் இந்தத் தேட்டங்கள் உள்ளன. தொழிலாள வர்க்கத்தின் உள்ளும் இளைஞர்கள் இடையேயும் ட்ரொட்ஸ்கிச செல்வாக்குகள் எழுச்சி அடைவதைக் கண்டு இலங்கை முதலாளி வர்க்கம் கொண்டுள்ள அச்சத்துக்கு பு. க. க. அங்கத்தவர்களுக்கு எதிரான மக்கள் விடுதலை முன்னணியின் கொலைப் பயமுறுத்தல்கள் இன்னுமோர் எடுத்துக் காட்டாகும். இந்தத் தாக்குதல்களையும், அச்சுறுத்

தங்களையும் பு. க. க. அவசியமான பாதுகாப்பு முன்னேற்பாடுகளுடன் எதிர் கொள்ள வேண்டும். எல்லாவற்றுக்கும் மேலாக தொழிலாள வர்க்கத்தின் உள்ளே அது நடாத்தி வரும் புரட்சிகர வேலைகளை உக்கிரமாக்க வேண்டும்.

- தமிழ் ஈழத்தில் இருந்து இந்திய துருப்புக்களை வெளியேற்று! தமிழ் விடுதலைப் போராட்டத்தில் கை வைக்காதே!

- காந்தி — ஜயவர்தன உடன்படிக்கை ஒழிக!

- தமிழ் ஈழம், இலங்கை ஐக்கிய சோசலிச அரசுகளுக்கான போராட்டத்தின் தமிழ், சிங்கள தொழிலாளர்களை ஐக்கியப்படுத்து!

- சிங்கள தமிழ் தொழிலாள வர்க்கத்தின் முன்னணிப் படை புரட்சிக் கம்யூனிஸ்ட் கழகம் நீடூழி வாழ்க!

- நான்காம் அகிலத்தின் அனைத்துலகக் குழு நீடூழி வாழ்க!

# புரட்சிக் கம்யூனிஸ்ட் கழகத்தின் முன்நோக்கும் பணிகளும்

## நான்காம் அகிலத்தின் அனைத்துலகக் குழுவின் அறிக்கை 10-10-1986

**1.** தொழிலாளர் புரட்சிக் கட்சியின் ஓடுகாலிகளின் தோல்வியுடன் நான்காம் அகிலத்தின் அனைத்துலகக் குழுவின் வரலாற்றில் ஒரு புதிய சகாப்தம் ஆரம்பமாகியுள்ளது. ஒரு தசாப்தத்துக்கும் மேலாக ஹீலி – பண்டா – சுலோட்டர் கும்பலின் தேசிய வெறி, திரிபுவாத குண்டர் நிர்வாகத்தின் கீழ் நான்காம் அகிலத்தின் அனைத்துலகக் குழுவின் ட்றொட்ஸ்கிஸ்டுகள் தமது உலகக் கட்சியின் உள்ளேயே அரை சட்ட விரோத நிலைமைக்குள் புரட்சிகர விதி முறை காக்கும் ஒடுக்கப்பட்ட சிறுபான்மைக் குழுவாக இருக்க நேர்ந்தது. நிரந்தரப் புரட்சிக் கோட்பாடு, வெறும் கற்பனைக் கோட்பாடாகக் கருதப்பட்டதோடு, தொழிலாள வர்க்கத்தின் அரசியல் சுயாதீனத்துக்காகப் போராடிய சகலரும் அமைப்பு ரீதியிலான தாக்குதலின் ஆதிக்கத்துக்குள்ளாகினர். ஹீலியின் வலக் கையான எம். பண்டா தமது மாஓவாத சித்தாந்தத்தினையும், முதலாளித்துவ தேசிய வாத வேலைத் திட்டத்தையும் மூடிமறைக்கும் பொருட்டு வாயளவில் ட்றொட்ஸ்கிசத்தை கடைப்பிடித்தார். பண்டா, பாட்டாளி வர்க்க அனைத்துலக வாதத்தின் சோசலிசப் போராளி அன்றி, அரைக் காலனித்துவ முதலாளித்துவ வர்க்கத்தினதும், அதன் அரச எல்லைகளினதும் காப்பாளர் என்பது அரசி

யல் வரலாற்றை ஆராயும் போது நிருபிக்கப்பட்டுள்ளது. தமது நடவடிக்கைகளுக்கு உசிதமான முறையில் பங்களா தேஷில் இந்திய ஆக்கிரமிப்புக்கு அவரால் ஆதரவளிக்க முடிந்ததோடு, இந்தோனேஷிய ஐக்கியத்தின் பேரில் சுகார்ட் டோவின் பிணம் தின்னிகள் கிழக்கு ரீமோரில் நடாத்திய கோரமான மக்கள் படுகொலைகளைப் பேணுவதிலும் அவர் முன் நின்றார்.

**2.** பண்டாவின் முதலாளித்துவ தேசியவாதக் கருத்துக் கள் மத்திய கிழக்கு முதலாளித்துவ அரசாங்கங்கள் தொடர் பான ஹீலியின் வயிறு வளர்ப்பு சந்தர்ப்பங்களுடன் பெரிதும் ஒத்துப் போயிற்று. ஹீலி ஈராக் கம்யூனிஸ்ட் கட்சி அங்கத் தினர்களின் படுகொலைகளை அங்கீகரிக்கையில், பண்டா, கிழக்கு ரீமோர் விவசாயிகளை முழுமனே ஒழித்துக்கட்ட பேரார்வத்துடன் ஆதரவளித்தார். 1961 -64 காலப்பகுதி யில் சோசலிச தொழிலாளர் கட்சிக்கும் பப்லோவாதிகளுக் கும் இடையே ஏற்பட்ட கொள்கையற்ற மறு ஐக்கியத்தை யும், 1964 ஜுனில் திருமதி பண்டாரநாயக்காவின் கூட்டர சாங்கத்தில் இலங்கை சமசமாஜக் கட்சி நுழைவதையும் எதிர்த்து நடாத்திய போராட்டங்களில் கட்டிக்காத்த அடிப்படைக் கொள்கைளை இவர்கள் இருவரும் முழுமனே நிராகரித்தனர். இதன் காரணமாகவே ஹீலியும் பண்டா வும் புரட்சிக் கம்யூனிஸ்ட் கழகத்தினுடன் விரோதம் கொண் டதோடு, சுலோட்டரின் உதவியுடன் அதனை உடல் ரீதியில் அழித்தொழிக்கவும் தொழிற்பட்டனர். புரட்சிக் கம்யூ னிஸ்ட் கழகம், அவர்களின் காட்டிக் கொடுப்பின் கடந்த கால வரலாற்றை இடைவிடாது அவர் ளுக்கு ஞாப கப்படுத்துவதாக மட்டுமின்றி, உலகம் பூராவுமுள்ள முத லாளித்துவ தேசிய வாதிகளுடன் அவர்கள் ஏற்படுத்திக் கொள்ள முயன்ற கொள்கையற்ற கூட்டுக்களுக்கு உடல் ரீதியான தடையாகவும் விளங்கிற்று.

**3.** புரட்சிக் கம்யூனிஸ்ட் கழகத்துக்கு எதிராக தொழிலா ளர் புரட்சிக் கட்சி நடாத்திய தாக்குதல்கள் பற்றிய நீண்ட ஆச்சரியமான அறிக்கைகளை ஆயும் சந்தர்ப்பம் இன்று அனைத்துலகக் குழுவுக்குக் கிடைத்துள்ளது.

இத் தாக்குதல்களில் கழகத்தின் தலைமைக்கு எதிரான சேறடிப்பு, சிங்கள இனவாதிகளுடன் சேர்ந்து குழிபறித்தல்"

பு. க. க. காரியாளர்கள் ஜயவர்தனவின் குண்டர்களால் படு கொலை செய்யப்படுகையில் மௌனம் சாதித்து ஆதரவு வழங் கல் ஆதியன அடங்கும் இந்த கேடுகெட்ட நடவடிக்கைகளுக் காக தமது அரசியல் ஆளுமையை துஷ்பிரயோகம் செய்கை யில் இதனை எதிர் கொண்டு புரட்சிக் கம்யூனிஸ்ட் கழகம் உரிய முறையில் கிளர்ந்து எழ முடிந்தமைக்கு காரணம் ட்ரொட்ஸ்கிச அனைத்துலக வாத பாரம்பரியங்களில் ஆழமாக வேரூன்றி, உலகப் புரட்சியின் இலக்கில் ஊடாட்டமின்றி ஈடு பட்டிருந்த கட்சியாக அது இருந்தமையேயாகும்.

4. நீண்ட காலத்தின் பின்னர் இன்று, இந்திய துணைக் கண்டத்தின் பாட்டாளி வர்க்க, ஒடுக்கப்படும் விவசாயி களின் பாரிய பொறுப்புக்கள் பற்றி ட்ரொட்ஸ்கிசத்தின் விரகி மூலோபாயங்களை கலந்துரையாட நான்காம் அகிலத் தின் அனைத்துலகக் குழுவுக்கு வாய்ப்புக் கிடைத்துள்ளது. முதலாவதாக, எமது நடவடிக்கைகளுக்கு வழி- காட்டும் தீர்க்கமான அடிப்படைக் கொள்கைகள் பலவற்றை நாம் நிலை நிறுத்தியுள்ளோம். நான்காம் அகிலத்தின் அனைத் துலகக் குழுவின் கிளைகள் பாட்டாளி வர்க்கத்தின் கட்சிகளா கும். பின் தங்கிய நாடுகளில் விவசாயிகளின் பாத்திரத்தின் பெரும் முக்கியத்துவத்தை விளங்கிக் கொள்ளும் அதே சம யம், எமது கிளைகள் ஒரு போதும் விவசாயிகள் இயக்கத் துடன் இணையாதிருப்பதோடு, தமது சிறப்பான தொழிலாள வர்க்க அடையாளத்தை எதுவிதத்திலும் இழந்துபோகக் கூடாது. தேசிய ஜனநாயகப் புரட்சியினை தொழிலாள வர்க்க சர்வாதிகாரத்தினால் மட்டுமே பூரணத்துவம் செய்து வைக்க முடியும் என்ற ஊர்ஜிதம் செய்யப்பட்ட உண்மையில் இருந்து நாம் ஆரம்பிக்கின்றோம். நான்காம் அகிலத்தின் அனைத்துலகக்குழுவுக்கு தற்காலிகமான, மேலெழுந்தவாரியான வெற்றிகளையிட்டு அக்கறை இல்லை. அதன் காரியாளர்கள் நானாவிதமான முதலாளித்துவ தேசியவாதிகளுக்கு சேவகம் செய்பவர்களன்றி, சோசலிசப் புரட்சியை வழிநடாத்த முன் நிற்போராவார். 1927ல் ஏற்பட்ட தோல்வியின் ஆழமான அரசியல் படிப்பினைகளை விளங்கிக் கொள்ள மறுத்ததால் சீனத் தொழிலாள வர்க்கத்தினுள் வேரூன்றிய, மார்க்சிசக் கட்சியைக் கட்டி எழுப்பும் போராட்டத்தைக் கைநழுவ விட்ட மாஓ வாதத்தின் குணச் சிறப்புக்களை வாயடிக்கும் இயக்கத்தில் சேர்வதை நாம் அடியோடு நிராகரிக்கின்றோம். இந்தோனேசியா தொடக்கம் கம்போடியா வரையும், இறுதி

யின் சிறுவின் உள்ளேயும், பெற்ற படிப்பினைகளின் அடிப் படையில் கடந்த 37 ஆண்டுகளுள் மா ஒ வாதத்தின் ஐந் தொகையை தயார் செய்வதற்கு வேண்டிய அவகாசம் உலகத் தொழிலாளர் வர்க்கத்துக்குக் கிடைத்துள்ளது.

5. நான்காம் அகிலத்தின் அனைத்துலகக் குழுவினால் மட்டுமே ஆசிய மக்களை வெற்றிக்கு இட்டுச் செல்லும் மூலோபாயத்தை வளர்த்தெடுக்க மு ு யும். இந்த விளக்கத்தின் அடிப் படையிலேயே தமது இலங்கை கிளையின் வேலைத் திட்டங்கள் பற்றி அது அவதானத்துடன் கலந்துரையாடுகின்றது. புற நிலை நிலைமையின் அபிவிருத்திகளுக்கு ஏற்ப நான்காம் அகிலத்தின் அனைத்துலகக் குழு தேசிய இனப்பிரச்சினையை ஆய்வு செய்ததோடு, அது கீழ்க் கண்ட முடிவுக்கும் வந்தது:

அ). நான்காம் அகிலத்தின் அனைத்துலகக் குழுவின் இலங்கைக் கிளை, தேசிய இனங்களின் சு ய நி ர் ண ய உரிமை தொடர்பான லெனினின் நிலைப்பாட்டையும், ட்ரொட்ஸ்கியின் நிரந்தரப் புரட்சிக் கோட்பாட்டையும் அடிப்படையாகக் கொண்டுள்ளது. தனியான ஓர் அரசினை அமைக்கும் தமிழ் மக்களின் கோரிக்கைக்குப் புரட்சிக் கம்யூனிஸ்ட் கழகம் சளைக் காது ஆதரவளிக்கிறது. சோல்பரி அரசியல் அமைப்புச் சட் டத்தின் கோழை அதிகார வெறியர்களான இலங்கை முத லாளி வர்க்கத்துக்கு தேசிய இனங்கள் இரண்டினையும் ஐக்கி யப் படுத்தும் ஜனநாயக வேலைத் திட்டத்தை அமுல் செய்ய இயலாமையை வரலாற்று அனுபவங்கள் சந்தேகத்துக்கு இட மின்றி நிரூபித்துள்ளன. 1947ல் இருந்து அவர்கள் தமிழ் மக் களின் உரிமைகளை நிராகரித்தமை, மக்கள் படுகொலை யுத்த மாக இன்று வளர்ச்சி கண்டுள்ளது. இந் நிலைமைகளின் கீழ் பிரிந்து செல்வது தமிழீழ மக்களின் தேவைகளுக்கு பொருத்த மானது. அவ்வாறே சிங்கள, தமிழ் தொழிலாள வர்க்கத் தினையும், ஏழை விவசாயிகளையும் ஐக்கியப்படுத்தவும் நல்ல நிலைமைகளை சிருஷ்டிக்கின்றது.

ஆ). தமிழ் மக்கள் தமது அரசினை நிறுவும் உரிமைப் போராட்டத்தில் புரட்சிக் கம்யூனிஸ்ட் கழகம் என்றும் பாட் டாளி வர்க்க அனைத்துலக வாதத்தில் இருந்தே ஆரம்பிக்கின் றது. ஆதலால் தமிழ் முதலாளி வர்க்கம் சலுகைகளுக்காக செய்யும் பிரயத்தனங்களுக்கு எதுவிதமான ஆதரவும் வழங் காது: சலுகையும் வழங்காது. தேசிய விடுதலைப் போராட்

டத்தின் உள்ளே புரட்சிக் கம்யூனிஸ்ட் கழகம் எப்போதும் தொழிலாள வர்க்கத்தின் நலன்களின் பேரில் தோன்றி வருவதோடு, தமிழ் முதலாளி வர்க்கத்தில் இருந்தும், குட்டி முதலாளித்துவ வர்க்கங்களில் இருந்தும் அதன் சுயாதீனத்தை உறுதி செய்யப் போராடுகின்றது. தமது அரசினை அமைக்க தமிழ் மக்களுக்குள்ள உரிமையைக் காக்க நிபந்தனையின்றி முன் நின்றுவரும் அதே சமயம் புரட்சிக் கம்யூனிஸ்ட் கழகத்தின் வேலைத் திட்டம் ஏழை விவசாயிகளுடனும், தெற்கில் உள்ள வெகுஜனங்களுடனும் நெருங்கி இணைந்து கிளர்ந்துள்ள தமிழ் தொழிலாள வர்க்கத்தின் தலைமையின் கீழ் ஜனநாயகப் புரட்சி வெற்றி காணும் என்பதை சுட்டிக் காட்டுகின்றது. சுயநிர்ணயத்துக்கான தேசியப் போராட்டத்தை ஏகாதிபத்தியத்திற்கும், தமிழ், சிங்கள முதலாளி வர்க்கங்களிடையேயுள்ள அதன் ஏஜன்டுகளுக்கும் எதிராக சோசலிசப் புரட்சியுடன் இணைப்பதன் மூலம் மட்டுமே தமிழ் ஈழத்தின் சுதந்திரத்தை வென்றெடுக்க முடியும் என வலியுறுத்துகின்றது. தேசிய விடுதலைச் சக்திகளினால் நடாத்தப்பட்டு வரும் ஆயுதப் போராட்டத்தின் முற்போக்குத் தன்மையை புரிந்து கொண்டுள்ள புரட்சிக் கம்யூனிஸ்ட் கழகம், தொழிலாளர் - விவசாயிகளின் சோவியத் சபைகளை அமைக்கவும், ஏகாதிபத்திய முதலாளித்துவ சொத்து முறையினை நிர்மூலமாக்கவும் போராடுவதன் மூலம் அப் போராட்டத்தைப் போஷித்து வளர்த்து ஆழமாக்க முயல்கின்றது.

இ): சகல நிலைமைகளிலும் தமிழ் சிங்கள தொழிலாள வர்க்கத்தின் முன்னணி படை அணியாகப் புரட்சிக் கம்யூனிஸ்ட் கழகம் தமது நிபந்தனையற்ற சுயாதீனத்தை காக்க போராடுவதன் மூலமே இம் முன்னோக்கை முன்னெடுத்துச் செல்லமுடியும். சிங்கள ஒடுக்கு முறைக்கு எதிராக முதலாளித்துவ தேசிய இயக்கத்துடன் உபாய ரீதியிலான கூட்டின் அவசியத்தை அங்கீகரிக்கும் அதே சமயம் இச் சகல உடன்பாடுகளும் கண்டிப்பாக 'தனியாக பயணம் செய்! இணைந்து தாக்கு!' என்ற லெனினிச கொள்கைகளை அடிப்படையாகக் கொள்ளவேண்டும்.

ஈ). தேசிய விடுதலைப் போராட்டத்தின் முற்போக்குத் தன்மை என்னவாக இருப்பினும் சிங்கள - தமிழ் தொழிலாளர்களுக்கென ஒரு புரட்சிக் கட்சியே இருக்க முடியும். அக் கட்சி, புரட்சிக் கம்யூனிஸ்ட் கழகமே உள்நாட்டு யுத்த நிலைமைகளின் கீழ் அமைப்பு ரீதியான இணைக்காணலின் அவசியத்

தை அங்கீகரிக்கும் அதே சமயம் புரட்சிக் கம்யூனிஸ்ட் கழகம் தீவின் சகல தொழிலாளர் பிரிவினரையும், அதாவது சிங்களத் தொழிலாளர்கள் தோட்டத் தொழிலாளர்களை ஒரே பாதகையின் கீழ் அணிதிரட்டப் போராடுகின்றது. தீவில் இன்றுள்ள திட்ட வட்டமான நிலைமைகளின் கீழ் வடக்கில் பாதுகாப்பு வாதமும் தெற்கில் தோற்கடிப்பு வாதமும் ஒன்றிணைந்த புரட்சிகர வேலைத் திட்டத்தின் கூறுகளாகும்.

தேசிய இயக்கத்தின் முதலாளித்துவ தன்மையைப் புரிந்து கொள்ளும் அதே சமயம் புரட்சிக் கம்யூனிஸ்ட் கழகம் அதன் சீர்திருத்தவாத, புரட்சிகர பிரிவுகளுக்கிடையே அவசியமான வேறுபாட்டை (எம். பண்டா குறிப்பிட்ட 'வெறும்' வேறுபாடு அல்ல) நிலை நாட்டுகின்றது.

1. புரட்சிக் கம்யூனிஸ்ட் கழகம், தமிழர் விடுதலைக் கூட்டணியை தமிழ் முதலாளி வர்க்கத்தின் முக்கிய பிரதிநிதியாகக் கொள்கிறது. ஆயுதப் போராட்டத்தின் எதிரிகளான இவர்கள் தேசிய சுதந்திரத்துக்காக கொள்கை சார்ந்த உறுதியான போராட்டத்தை நடாத்த இலாயக்கற்றவர்கள்; அதன் முழு வரலாறும், இந்திய - இலங்கை முதலாளித்துவ வர்க்கங்களுக்கு வெட்கமின்றி 'பந்தம்' பிடித்தல், கோழைத்தனமான சமரசங்கள், முழுப்படியான காட்டிக்கொடுப்புக்களால் நிறைந்துள்ளது. சிங்கள ஒடுக்குமுறையாளரிடம் இருந்து சுதந்திரம் பெறுவதைக் காட்டிலும் இவர்கள் தமிழ் பரந்த மக்களைக் கண்டே அஞ்சுகின்றனர். தமிழ் விடுதலைக் கூட்டணியின் துரோக சுயரூபத்தை அம்பலப்படுத்துவதும், தேசிய விடுதலை இயக்கத்தை தேசிய முதலாளிகளின் நலன்களுக்கு அடிமைப்படுத்தும் அவர்களின் முயற்சியை அம்பலப்படுத்துவதும் புரட்சிக்கம்யூனிஸ்ட்கழகத்தின் பொறுப்பாகும்.

2. தமிழீழ விடுதலைப் புலிகள் இயக்கம் போன்ற நாலுவித தமிழ் விடுதலை அமைப்புக்களை புரட்சிகரத் தேசியவாதிகளாக புரட்சிக் கம்யூனிஸ்ட் கழகம் இனம் காண்கின்றது. தமிழ் தாயகத்தை இராணுவ ரீதியில் விடுதலை செய்யும் பொருட்டு அவர்கள் நடாத்திவரும் திடசங்கற்பம் மிக்க போராட்டம் இடம் பெறும் அதே சமயம் அவர்களின் குட்டி முதலாளித்துவ சிந்தனையும், வேலைத் திட்டமின்மையும்; வெற்றியை அடைவதற்கு அவசியமான அளவில் தொழிலாளர்களையும்,

விவசாயிகளேயும் அணிதிரட்டா வண்ணம் அவர்களே தடுத்துள்ளது. மேலும், தமிழர் விடுதலைக் கூட்டணியின் அழிவுமிக்க அழுத்தங்களே எதிர்த்துப் போராடவும், இந்திய முதலாளி வர்க்கத்தின் துரோக குழி பறிப்புக்களில் இருந்து தமிழ் விடுதலே இயக்கத்தின் சுயாதீனத்தைநிலேநாட்டுவதிலும்அவர்கள் வெற்றி பெறுவதாய் இல்லே. இக்குழுக்களின் குட்டி முதலாளித்துவ தன்மையில் இருந்து ஊற்றெடுக்கும் அவர்களின் வேலேத்திட்டம் சம்புந்தமான குழப்பங்கள் இவர்களே இந்திய முதலாளி வர்க்கத்தினதும் மாஸ்கோவ், பீகிங் ஸ்டாலின் வாதிகளினதும் பொறிகளில் அகப்பட்டவைக்கும் அரசியல் நச்சு வளேயத்துக்கு இட்டுச் செல்கிறது. சகல நிலேமைகளிலும் தனது அரசியல் சுயாதீனத்தைப் பேணிக் கொள்ளும் புரட்சிக் கம்யூனிஸ்ட் கழகம், புரட்சிகர தேசியவாதிகளிலிருந்து சுயாதீனமான முறையில் தொழிலாள வர்க்கத்தை அணிதிரட்டுகின்றது. அவ்வாறே அவர்களின் கொள்கைகளே விமர்சிக்கும் உரிமையையும் கொண்டிருக்கும்.

அ). தேசிய சுயநிர்ணயத்துக்காக வடக்கில் நடைபெறும் போர்ராட்டத்தையும், தெற்கில் சிங்கள தொழிலாளர், ஒடுக்கப்படும் விவசாயிகளின் போராட்டத்தையும் ஒன்றுடன் ஒன்று தொடர்புபட்ட ஒரே முழுமையாக புரட்சிக் கம்யூனிஸ்ட் கழகம் கணிக்கின்றது. இவ்விரண்டு போராட்டங்களுக்கும் இடையே சீனப் பெருஞ்சுவர் கிடையாது. அவ்வாறே இவற்றின் வளர்ச்சியை முன்கூட்டியே நிர்ணயம் செய்யும் தொடர் வரிசைகளும் கிடையாது. வடக்கின் விடுதலேப் போராட்டத்தினுல் உக்கிரம் கண்டு வரும் இலங்கை முதலாளித்துவத்தின் குணப்படுத்த முடியாத நெருக்கடி, சிங்கள வெகுஜனங்களதும், தமிழ் தோட்டத் தொழிலாளர்களதும் கிளர்ச்சியை உண்டுபண்ணும் அத்தகைய கிளர்ச்சி, புரட்சிக்கான முன்னேடி நிலேமைகளே உருவாக்குவதன் மூலம் ஆட்சி பற்றிய பிரச்சினேயை நிகழ்ச்சிநிரலில் சேர்க்க இடமுண்டு. அந்நிலேயில் தீவு பூராவும் தொழிலாள வர்க்கப் போராட்டத்தின் இணேந்த தன்மையை முன்னணிக்குக் கொணர்ந்து, இலங்கைத் தொழிலாள வர்க்கமும், விவசாயிகளும் தமிழ் விடுதலேக்கான தீர்க்கமான தாக்குதலே நடாத்தும். சம்பவங்களின் நிச பயணத்திசை என்னவாக இருப்பினும், சோசலிச உள்ளடக்கத்தை தேசிய இயக்கத்தினுள் கொண்டு செல்லப் புரட்சிக் கம்யூனிஸ்ட் கழகம் நடாத்தும் போராட்டம், சிங்கள வெகுஜனங்களுக்கு

உத்வேகத்தை வழங்கி, வடக்கிலும், தெற்கிலும் ஒடுக்கப்படும் மக்களிடையே புரட்சிகரப் பிணைப்பை ஊர்ஜிதம் செய்யும்.

6. தெற்கில் புரட்சிக் கம்யூனிஸ்ட் கழகம் எதிர் கொள்ளும் முக்கிய அரசியல் பணி, சமசமாஜ - ஸ்டாலினிச - இ. தொ. கா. தலைமைகளின் பிடியில் இருந்து தொழிலாள வர்க்கத்தை மீட்டெடுப்பதே என்பதை அனைத்துலகக் குழு ஏற்றுக் கொள்கின்றது. தமிழ் மக்களுக்கு எதிராக இடம் பெற்று வரும் மக்கள் படுகொலை யுத்தத்தில், இத் தலைமைகள் இராணுவ ஒடுக்கு முறைக்கு நேரடி ஆதரவு வழங்குவதன் மூலமோ, வட்டமேசை மகா நாடுகளில் கோழைத்தனமாக பங்கு கொள்வதன் மூலமோ அல்லது அத்தகைய வேறு வடிவிலான துரோக ஆதரவுகளுக்கு எதிராக தொழிலாள வர்க்கத்தை அணிதிரட்டுவது இதன் நடுமையமாக உள்ளது. யுத்தத்துக்கு எதிரான இப் பிரச்சாரத்துடன் கைகோர்த்த வண்ணம், யுத்தத்துக்கும், சர்வதேச நாணய நிதியத்தின் எஜமான்களின் தேவைகளின் பேரிலும் அரசாங்கமும் அதன் அடிவருடிகளும் கேட்டு நிற்கும் பொருளியல் தியாகங்களை அடியோடு நிராகரிக்கும்படி புரட்சிக் கம்யூனிஸ்ட் கழகம் தொழிலாள வர்க்கத்தை திடசங்கற்பத்துடன் வேண்டுகின்றது.

## சி. ல. சு. க. வுடன் கூட்டு

7. ஏகாதிபத்தியத்தின் கேவலமான முதலாளித்துவ ஏஜன்டுகளுக்கும். அவர்கள் சார்ந்துள்ள படு பிற்போக்கு முதலாளித்துவ அரசுக்கும் எதிராக தொழிலாள வர்க்கத்தை பரந்த அளவில் அணிதிரட்டுவதற்கான வேலைத் திட்ட அடிப்படையாகப் புரட்சிக் கம்யூனிஸ்ட் கழகம் சோசலிச வேலைத்திட்டத்தினை முன்வைக்கின்றது. தேசியமுதலாளித்துவ ஏஜன்டுகளை ஒழித்துக் கட்டாமலும், உற்பத்திச் சாதனங்களில் தொழிலாளர் உரிமையையும், நிர்வாகத்தையும் உறுதி செய்யும் போராட்டம் இல்லாமலும் ஏகாதிபத்தியத்துக்கு எதிராக எந்தவொரு போராட்டமும் இடம் பெற முடியாது.

8. அரைக் காலனித்துவ நாடான இலங்கை எதிர் கொண்டுள்ள தீர்க்கப்படாத ஜனநாயகப் பணிகளைப் பற்றி

ஆழமான விளக்கம் கொண்ட புரட்சிக் கம்யூனிஸ்ட் கழகம் தொழிலாள வர்க்கத்துக்கும், ஒடுக்கப்படும் விவசாயிகளுக்கும் இடையே பிணைப்பினை உண்டுபண்ணப் போராடுகின்றது. பல தசாப்தங்களாக விவசாயிகளின் மிகவும் அடிப்படையான தேவைகளைத் தன்னும் நிறைவேற்றத் தவறிய முதலாளித்துவக் கட்சிகள், நிச ஜனநாயக வேலைத் திட்டத்துக்குப் பதிலாக சிங்கள இனவெறிப் பிரச்சாரத்தில் ஈடுபட்டுள்ளன. புரட்சிகர வேலைத் திட்டத்தினை முன்வைக்க மறுத்ததன் மூலமும், சி. ல. சு. கட்சியுடன் கூட்டுச் சேர்ந்ததன் மூலமும் சமசமாஜக் கட்சி விவசாயிகளை முதலாளி வர்க்கத்திற்குப் பலியிட்டது.

**9.** கொடிய சுரண்டலோடு, இரக்கமற்ற ஒடுக்குமுறைக்கும் (குடியுரிமை மறுப்பு ஆதிய) பலியாகியுள்ள தோட்டத் தொழிலாளர்களுக்கு எதிரான ஒடுக்கு முறையின் ஊற்றுவாய் இலங்கை முதலாளித்துவ அரசின் தோற்றமும், வளர்ச்சியுமே. இந்த ஒடுக்கு முறை, 1948ல் சோ - பரி அரசியலமைப்புச் சட்டத்தின் கீழ் வழங்கப்பட்ட போலி சுதந்திரத்துக்கு எதிராக ட்ரொட்ஸ்கிஸ்டுகள் காட்டிய வரலாற்று புகழ்மிக்க- சமசமாஜிஸ்டுகள் நீண்ட காலத்துக்கு முன்பே மறந்து போய்விட்ட - எதிர்ப்பினை ருசுப்படுத்தியுள்ளது. இதன் சமீபகால கடைப்புளிக் கோலங்கள் எந்தவொரு ஜனநாயகப் பணியையும் அமுல் செய்ய முடியாத இலங்கை முதலாளி வர்க்கத்தின் இயலாமையை நிரூபித்துள்ளது. பு. க. க சகல பாகுபாடுகளையும் அகற்றும்படியும், சகல தோட்டத் தொழிலாளர்களுக்கும் குடியுரிமை வழங்கும்படியும், பௌத்தத்துக்கும் சிங்கள மொழிக்கும் அளிக்கப்பட்டுள்ள சலுகைகளை நீக்கும்படியும் வேண்டுகின்றது. அரசியலமைப்புச் சட்டத்தை நீக்குவதற்கு நிச அரசியலமைப்புச் சபை அவசியமாகியுள்ளது. தோட்டத் தொழிலாளர்கள் அதில் பங்கு கொண்டு, வாக்களிக்கப் பூரண உரிமை வழங்கப்படவேண்டும்.

**10.** முதலாளி வர்க்கக் கட்சிகள் அனைத்திற்கும் எதிராக தொழிலாளர் - விவசாயிகள் அரசாங்கத்துக்கான கோரிக்கையை அடிப்படையாகக் கொண்டு செய்யும் போராட்டத்தின் மூலமே இவ் வேலைத் திட்டத்தை யதார்த்தமாக்க முடியும். இம் முன் நோக்கு, முதலாளித்துவ வர்க்கத்தின்

எத்தவொரு பிரிவினருடனுமான அரசியல் கூட்டினை மக்கள் முன்னணியை மூர்க்கமாக எதிர்க்கின்றது. இந்த இலங்கையில் புரட்சிக் கம்யூனிஸ்ட் கழகம், சமசமாஜ - கம்யூனிஸ்ட் கட்சிகள் அரசாங்கத்துடனும், முதலாளித்துவக் கட்சிகளுடனும் கொண்டுள்ள சகல உறவுகளையும் துண்டித்துக் கொள்ளக் கோருவதுடன், ஆட்சியதிகாரத்தை கைப்பற்றி மேலே குறிப்பிட்ட ஜனநாயக, சோசலிச வேலைத் திட்டத்தை அமுல் செய்யும்படி கோருகின்றது. புரட்சிக் கம்யூனிஸ்ட் கழகம் தோட்டத் தொழிலாளர்களின் வலதுசாரித் தலைவரான தொண்டமானை யூ. என். பி. அரசாங்கத்திலிருந்து இராஜினுமாச் செய்யும்படி வேண்டுகின்றது. இந்த விதத்திலேயே இத் துரோகிகளின் முகமூடிகளை கிழித்தெறியவும் வெகுஜனங்களை புரட்சிக் கட்சியின் பக்கம் வென்றெடுக்கவும் முடியும் பு. க. க. வின் கொள்கை ட்ரொட்ஸ்கியின் போதனைகளில் இறுக்கமாக காலூன்றி நிற்கின்றது.

''தொழிலாளர்களையும், விவசாயிகளையும் அடிப்படையாகக் கொண்டதும் அவர்களின் சார்பில் பேசுகின்றதுமான சகல கட்சிகளையும் இயக்கங்களையும் முதலாளித்துவ வர்க்கத்திலிருந்து அரசியல் ரீதியில் பிரியுமாறும், தொழிலாளர்-விவசாயிகள் அரசாங்கத்துக்கான போராட்டப் பாதையில் காலடி வைக்குமாறும் நாம் வேண்டுகின்றோம். இப் பாதையில், முதலாளித்துவ பிற்போக்குக்கு எதிராக நாம் அவர்களுக்கு பூரண ஆதரவு வழங்குவோம். அதே சமயம், நாம் அந்த இடைமருவு கோரிக்கைகளை சூழ பிரச்சாரத்தை விருத்தி செய்வோம். எமது கருத்தின்படி அவை 'தொழிலாளர் - விவசாயிகள்' அரசாங்கத்துக்கான வேலைத்திட்டமாகின்றன.''

**11.** தொழிலாளர் - விவசாயிகள் அரசாங்கத்தினை அமைக்கும் பு. க. க வின் கோரிக்கை, பாட்டாளி வர்க்க சர்வாதிகாரத்திற்கு எதிரிடையாக முன்வைக்கப்படவில்லை. ஆனால் தொழிலாளர்களும், விவசாயிகளும் தமது சொந்த சோவியத் அதிகாரத்தை நிறுவுவதற்கு அவர்களை அணிதிரட்டுவதற்கான ஒரு இடைமருவு கோரிக்கையாகவே முன் வைக்கப்படுகின்றது. வர்க்கப் போராட்டத்தின் வரலாற்றுத் தொடரில் பாட்டாளி வர்க்க சர்வாதிகாரத்துக்குத் தடையாக ஒரு விசேட ஜனநாயக கட்டத்தைத் திணிக்கச் செய்யப்படும் சகல முயற்சிகளையும் புரட்சிக் கம்யூனிஸ்ட் கழகம் நிராகரிக்

இன்றது; எதிர்த்துப் போகிடுகின்றது; மேற்சொன்ன வேலைத் திட்டத்துக்கான பிரச்சாரத்துடன் இணைந்த வண்ணம், புரட்சிக் கம்யூனிஸ்ட் கழகம் நிலைமைகள் பக்குவம் அடையும் நிலையில் புதிய அரச அதிகாரத்துக்கான அடிப்படையாக தொழிலாளர் - வி 'சாயிகள் சோவியத்துக்களை அமைக்கும்படி அழைப்பு விடுகின்றது. இது முதலாளித்துவ அர சினைச் சிதறடிப்பதில் இருந்து தோற்றம் எடுக்கும்.

**12.** சிங்கள - தமிழ் வெகுஜனங்களின் புரட்சிகரப் போராட்டங்கள், அனைத்துலகத் தொழிலாள வர்க்கத்தின் தலைவிதி - முக்கியமாக கோடானு கோடி இந்திய பாட்டாளி வர்க்கத்தினுடன் பிரிக்க முடியாத விதத்தில் இணைந்துள்ளது. இந்தியத் தொழிலாள வர்க்கத்துடன் நெருக்கமான தோழமை உறவுகளை ஏற்படுத்துகையில், இந்தியத் துணைக் கண்டம் பூராவும் ஒரு கூட்டு அமைப்பினை இரண்டாம் உலக மகா யுத்தத்தின் போது உருவாக்க சமசமாஜக் கட்சி நடாத்திய தைரியமிக்க முன்னோடி வேலையின் வரலாற்றினை புரட்சிக் கம்யூனிஸ்ட் கழகம் ஆய்வு செய்ய வேண்டும். இந்திய - இலங்கைத் தொழிலாள வர்க்கங்களின் பொதுநிலை நலன்களை உறுதி செய்வதே, இந்த தொடர்புகளை புனருத்தாரணம் செய்வதற்கான முதல் நடவடிக்கையாக விளங்க வேண்டும்.

**13.** தொழிலாளர் புரட்சிக் கட்சியின் ஓடுகாலிகளின் பிடியில் இருந்து விடுபட அனைத்துலகக் குழு நடாத்திய போராட்டத்திலும் ட்ரொட்ஸ்கிச வேலைத் திட்டத்தினால் உலக இயக்கத்தை மீண்டும் ஆயுத பாணியாக்குவதிலும் ஒரு தீர்க்கமான பாத்திரத்தை வகித்த புரட்சிக் கம்யூனிஸ்ட் கழகம் இன்று தனது உள்ளார்ந்த அமைப்பினை உடல் ரீதியில் பலப்படுத்துவதில் தொடர்ந்து முன்னேற வேண்டும். பு. க. க. வை கோட்பாட்டு ரீதியில் மீள ஆயுதபாணியாக்கியமை அதன் பத்திரிகை விற்பனையை விரிவுபடுத்தவும், புதிய அங்கத்தவர்களைத் திரட்டவும், புதிய கிளைகளை அமைக்கவும் சாத்தியமான நல்ல நிலைமைகளை உருவாக்கியுள்ளது புரட்சிக் கம்யூனிஸ்ட் கழக அங்கத்தினர்களின் எல்லை கடந்த விசுவாசம் உலகப் புரட்சி இலட்சியத்துக்கான அவர்களின் அர்ப்பணம், முதலாளித்துவ அரச ஒடுக்கு முறையின் எதிரில் அவர்களின்

அஞ்சாமை ஆகியவற்றை அறிந்த நான்காம் அகிலத்தின் அனைத்துலகக் குழு அதன் இலங்கை கிளை இப்போது பெரும் முன்னேற்றங்களை செய்ய தயாராகியுள்ளது என்பதில் நம்பிக்கை கொண்டுள்ளது இந்தியத் துணைக் கண்டம் பூராவும் ட்ரொட்ஸ்கிசத்துக்கு நிச வாய்ப்பான எதிர்காலம் உண்டு.


## "தொழிலாளர் பாதை"
## சந்தாதாரர் ஆகுங்கள்!

அஞ்சல் கட்டணம் உட்பட
'தொழிலாளர் பாதை' சந்தா விபரம் :

1 மாதம் — ரூ. 3–30    3 மாதம் — ரூ. 10–20
6 மாதம் — ரூ. 20–40    1 வருடம்— ரூ. 40–80

பெயர் :————————————

முகவரி :————————————

————————————

சந்தாக் காலம்:—————— ரூ.——— சதம்———

சந்தாப் பணதிற்காகிய
அஞ்சல் அல்லது காசுக்கட்டளையுடன்
நிரப்பிய இப்பத்திரத்தை அனுப்பிவைக்கவேண்டிய

முகவரி :

நிர்வாகி, "தொழிலாளர் பாதை"
90, 1-வது மாவிகாகந்தை ஒழுங்கை, கொழும்பு 10.

V. Mahesan N. S. Ranjan
Ranjan

# புரட்சிக் கம்யூனிஸ்ட் கழகத்தில் சேருங்கள்

பெயர் : V. Mahesan.

முகவரி : No. 51, Esakimuthu place

கழகத்தைப் பற்றி எனக்கு மேலும் விபரங்கள் வேண்டும் நிரப்பிய இப்பத்திரத்தை அனுப்ப வேண்டிய முகவரி:

தேசிய செயலாளர்,

## புரட்சிக் கம்யூனிஸ்ட் கழகம்

இல. 90, 1 - வது மாளிகாகந்தை ஒழுங்கை,
கொழும்பு — 10.

அட்டை படம்:— தமிழ் ஈழ விடுதலை போராளிகளால் கவிழ்க்கப்பட்ட இந்திய கவச வாகனம்

## 'தொழிலாளர் பாதை' வெளியீடு

## விலை ரூபா. 3.00

பிரதாச அச்சகம், இல. 51 நாகஹவத்தை வீதி மஹரகம